# Chapter 1.1

# கலங்கரை விளக்கம்

---

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**Question 1.**
வேயாமாடம் எனப்படுவது ………..
அ) வைக்கோலால் வேயப்படுவது
ஆ) சாந்தினால் பூசப்படுவது
இ) ஓலையால் வேயப்படுவது
ஈ) துணியால் மூடப்படுவது

**Answer:**
ஆ) சாந்தினால் பூசப்படுவது

**Question 2.**
உரவுநீர் <u>அழுவம்</u> – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்
அ) காற்று
ஆ) வானம்
இ) கடல்
ஈ) மலை

**Answer:**
இ) கடல்

**Question 3.**
கடலில் துறை அறியாமல் கலங்குவன …….
அ) மீன்கள்
ஆ) மரக்கலங்கள்
இ) தூண்க ள்
ஈ) மாடங்கள்

**Answer:**
ஆ) மரக்கலங்கள்

**Question 4.**
தூண் என்னும் பொருள் தரும் சொல் …..
அ) ஞெகிழி
ஆ) சென்னி
இ) ஏணி
ஈ) மதலை

**Answer:**
ஈ) மதலை

## குறுவினா

**Question 1.**
மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது எது?

**Answer:**

- மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது கலங்கரை விளக்கம்.
- கடலில் துறை அறியாமல் கலங்கும் மரக்கலங்களைத் தன்னை நோக்கி கலங்கரை விளக்கம் அழைப்பதாகக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் தம் பாடலில் அழகாக சிறப்பித்துக் கூறுகிறார்.

**Question 2.**
கலங்கரை விளக்கில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?

**Answer:**
கலங்கரை விளக்கில் இரவு நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்.

## சிறுவினா

கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகளை எழுதுக.

**Answer:**

- கலங்கரை விளக்கமானது வானம் கீழே விழாமல் தாங்கிப் பிடிக்கும் தூண் போலத் தோற்றமளிக்கிறது.
- ஏணி கொண்டு ஏற முடியாத அளவிற்கு உயரமாக உள்ளது.

- திண்மையான அதாவது திடமான கலவைச் சாந்து கொண்டு பூசப்பட்ட வானத்தை முட்டும் மாடத்தை உடையது.
- இந்த கலங்கரை விளக்கத்தில் இரவில் ஏற்றப்பட்ட எரியும் விளக்கு , திசை தெரியாமல் தவிக்கும் மரக்கலங்களைத் தன் துறை நோக்கி அழைப்பதாக புலவர்தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**சிந்தனை வினா**

கலங்கரை விளக்கம் கப்பல் ஓட்டிகளைத் தவிர வேறு யாருக்கெல்லாம் பயன்படும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

Answer:

- கடலில் சென்று மீன் பிடிக்கும் மீனவர்கள் மீன் பிடித்து திரும்பவும் கரை சேரவும் இக்கலங்கரை விளக்கம் பெரிதும் துணை புரிகின்றது.
- கடற்பயணம் சென்று கரை திரும்பும் பயணிகளுக்கு இக்கலங்கரை விளக்கம் சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறது.

**கற்பவை கற்றபின்**

Question 1.

கடற்கரைக்குச் சென்று அங்குள்ள காட்சிகளைக் கண்டு மகிழ்க.

Answer:

- நம்முடைய விடுமுறையை மகிழ்ச்சியாக கழிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கும் ஒரு முக்கிய இடம் கடற்கரை.
- பல இயற்கைச் சூழல்கள் கலந்த நம்முடைய நாட்டில் பல மாநிலங்கள் கடற்கரையோடு ஒட்டியுள்ளன.

**மெரினா கடற்கரை :**

- தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் அமைந்துள்ள மெரினா கடற்கரை உலகின் நீளமான கடற்கரைகளில் ஒன்றாகும். இதன் நீளம் 13 கிலோ மீட்டராகும்.
- தமிழகக் கடற்கரைகளிலேயே எல்லா நாள்களிலும் அதிக அளவு மக்கள் கூடும் கடற்கரையாக மெரினா கடற்கரை உள்ளது.
- இதன் அருகில் அண்ணா நினைவிடம், எம்.ஜி.ஆர் நினைவிடம், ஜெயலலிதா நினைவிடம், கலைஞர் கருணாநிதி நினைவிடம் ஆகியவை உள்ளன.

**கன்னியாகுமரி கடற்கரை :**

- இந்தியாவின் தென்கோடியில் உள்ள கன்னியாகுமரியில் இந்தக் கடற்கரை அமைந்துள்ளது.
- உள்ளூர் மட்டுமல்லாது உலகிலுள்ள வெளிநாட்டுப் பயணிகளும் வந்து செல்லும் கடற்கரை இது.
- இங்கு வங்காள விரிகுடா, அரபிக்கடல், இந்தியப் பெருங்கடல் இணையும் முக்கடல் சங்கமம் உள்ளது.
- கடலுக்குள் பாறையில் அமைந்திருக்கும் விவேகானந்தர் சிலை மற்றும் 133 அடி 6 உயரத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலை ஆகியவை மிகவும் புகழ்பெற்றவை.
- இங்கு சூரிய உதயத்தையும், சூரிய அஸ்தமனத்தையும் காண தினமும் ஆயிரக்கணக்கானவர்கள் வருகின்றனர்.

Question 2.
‘**கலங்கரை விளக்கம்**’ – மாதிரி ஒன்று செய்து வருக.

Answer:
மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டியவை.

Question 3.
**கடலும் கலங்கரை விளக்கமும்** – ஓவியம் வரைந்து வண்ண ம் தீட்டுக.

Answer:



**கூடுதல் வினாக்கள்**

**சொல்லும் பொருளும் :**

1. மதலை – தூண்
2. சென்னி – உச்சி
3. ஞெகிழி – தீச்சுடர்
4. உரவுநீர் – பெருநீர்ப் பரப்பு
5. அழுவம் – கடல்
6. கரையும் – அழைக்கும்
7. வேயா மாடம் – வைக்கோல் போன்றவற்றால் வேயப்படாது. திண்மையாகச் சாந்து பூசப்பட்ட மாடம்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**Question 1.**
'மதலை' என்னும் சொல்லுக்குப் பொருள் …………
அ) தூண்
ஆ) உச்சி
இ) தீச்சுடர்
ஈ) கடல்

**Answer:**
அ) தூண்

**Question 2.**
'ஞெகிழி' என்னும் சொல்லுக்குப் பொருள்.
அ) தீச்சுடர்
ஆ) பெருநீர்ப் பரப்பு
இ) உச்சி

ஈ) அழைக்கும்

**Answer:**
அ) தீச்சுடர்

**Question 3.**
‘அழுவம்’ என்னும் சொல்லுக்குப் பொருள் ……..
அ) அழைக்கும்
ஆ) தூண்
இ) கடல்
ஈ) தீச்சுடர்
**Answer:**
இ) கடல்

**Question 4.**
‘சென்னி’ என்னும் சொல்லுக்குப் பொருள் …………
அ) உச்சி
ஆ) தீச்சுடர்
இ) அழைக்கும்
ஈ) கடல்

**Answer:**
அ) உச்சி]

**Question 5.**
‘உரவுநீர்’ என்னும் சொல்லுக்குப் பொருள்
அ) பெருநீர்ப் பரப்பு
ஆ) தீச்சுடர்
இ) உச்சி
ஈ) தூண்

**Answer:**
அ) பெருநீர்ப் பரப்பு

**Question 6.**
‘கரையும்’ **என்னும்** சொல்லுக்குப் பொருள் ………
அ) அழைக்கும்
ஆ) கடல்
இ) தீச்சுடர்
ஈ) உச்சி

**Answer:**
அ) அழைக்கும்

## விடையளி:

**Question 1.**
கலங்கரை விளக்கம் என்றால் என்ன?

**Answer:**

- தமிழர் தம்முடைய மதிநுட்பத்தால் தொழில்நுட்ப அறிவினைக் கொண்டு கலம் படைத்து அதாவது, முதலில் படகைத் தயாரித்தனர். படிப்படியாக பாய்மரக்கப்பல், கப்பல் ஆகியவற்றை உருவாக்கினர்.
- படகுகளைக் கொண்டு மீன் பிடித்தும் வணிகம் செய்தும் வாழ்ந்து வந்தனர்.
- கடற்பயணம் சென்று கரை திரும்புவதற்குத் தமிழர் கண்ட தொழில்நுட்பமே கலங்கரை விளக்கமாகும்.

**Question 2.**
பத்துப்பாட்டு நூல்களைப் பட்டியலிடுக.

**Answer:**

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

**Question 3.**
பெரும்பாணாற்றுப்படையின் நூலாசிரியர் பெயர் என்ன?

**Answer:**
பெரும்பாணாற்றுப்படையின் நூலாசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

**Question 4.**
கடியலூர் உருத்திரங்கண்ண னார் சங்கப் புலவரா?

**Answer:**
ஆம். இவர் சங்கப் புலவர்தான். இவர் கடியலூர் என்ற ஊரில் வாழ்ந்தவர்.

**Question 5.**
கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றிய நூல்கள் யாவை?

**Answer:**

- பெரும்பாணாற்றுப்படை
- பட்டினப்பாலை

**Question 6.**
பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் பெயர் என்ன?

**Answer:**
தொண்டைமான் இளந்திரையன்.

**Question 7.**
ஆற்றுப்படை என்றால் என்ன?

**Answer:**
வள்ளல் ஒருவரிடம் பரிசு பெற்றுத் திரும்பும் புலவர், பாணர் போன்றோர் அந்த வள்ளலிடம் சென்று பரிசு பெற, பிறருக்கு வழிகாட்டுவதாகப் பாடப்படுவது ஆற்றுப்படையாகும்.

**Question 8.**
பத்துப்பாட்டில் இடம் பெறும் ஆற்றுப்படை நூல்களைப் பட்டியலிடுக.

**Answer:**

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை